பள்ளிகள், மாணவியர் பள்ளிகள் மற்றும் தேர்வு மையங்கள் உள்ள பள்ளிகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா காலணிகள் வழங்கும் திட்டம் இவ்வரசால் 2012–2013 ஆம் கல்வியாண்டு முதல் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 10 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் காலணிகளுக்குப் பதிலாக 2020–2021 ஆம் கல்வியாண்டு முதல் ஷூ மற்றும் சாக்ஸ் 10 கோடியே 2 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் வழங்கப்படும். இதனால் 28 இலட்சத்து 64 ஆயிரத்து 885 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிக் கல்வித் துறைமூலம் இவ்வரசு செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டங்களால் பள்ளி மாணவ, மாணவியர்கள் உரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பள்ளிகளில் மிகவும் உகந்த சூழலில் தரமான கல்வி கற்க வழிவகுக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கான நிருவாகக் கட்டடம் மற்றும் சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்ககத்திற்கான அலுவலகக் கட்டடம் கட்டுதல், அரசுக் கல்லூரிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் குடியிருப்பு வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் செய்தல் உள்ளிட்ட உயர் கல்வித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. தமிழ்நாட்டில் உள்ள 112 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பெரும்பாலானவை தேசிய தர மதிப்பீட்டுச் சான்றிதழ் பெற்று சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த

தேசிய தர மதிப்பீட்டுச் சான்றிதழ் பெறும் வகையில், மேலும் 10 அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 54 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. 1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கல்லூரிக் கல்வி இயக்ககம் 54 வருடங்களாக தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த இயக்ககத்திற்கு தனியானதொரு கட்டடம் ஏற்படுத்திக் கொடுத்து, மின் ஆளுமை, கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் ஆகியவற்றை முழுமையாக நிறைவேற்ற ஏதுவாக கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கான நிருவாகக் கட்டடத்துடன், சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்ககத்திற்கான அலுவலகக் கட்டடமும் சேர்த்து, 3,534 சதுர மீட்டர் பரப்பளவில் 10 கோடி ரூபாய் செலவில் சென்னை சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் உள்ள ராஜூஸ் கல்லூரி ஆகியவற்றை முன்மாதிரி கல்லூரிகளாக மேம்படுத்தி, அதில் புதிதாக இளங்கலை, முதுகலை பாடப் பிரிவுகள் தோற்றுவித்தல், புதிதாக வகுப்பறைகள் கட்டுதல், இருக்கும் வகுப்பறைகளைப் புதுப்பித்தல், புதிய ஆய்வுக்கூடம் கட்டுதல், ஆய்வுக்கூடத்தைப் புதுப்பித்தல், கணினிமயமாக்கப்பட்ட நவீன நூலகம் அமைத்தல், புதிய கருத்தரங்கம் கட்டுதல் மற்றும் வளாக மேம்பாடு ஆகிய பணிகள் தலா 4 கோடி ரூபாய் வீதம் 8 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 98 அரசு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதில் 92 அரசு கல்லூரிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்த 92 அரசு கல்லூரிகளுக்கு தொடர்ந்து பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக சிறப்பு மானியமாக ஆண்டொன்றிற்கு 58 கோடி ரூபாய் வீதம் 2 ஆண்டுகளுக்கு 116 கோடி ரூபாய் வழங்கப்படும். இதன்மூலம் சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் கல்விச் சூழல்கள் வெகுவாக மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 8

5. கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் 10 வகுப்பறைக் கட்டடங்கள், கருத்தரங்குக்கூடம் மற்றும் பொது கருவிமயமாக்கல் ஆய்வுக்கூடம், சுற்றுச்சுவர், துணை வேந்தர், பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர் மற்றும் கல்வி சார் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகளை உலகத் தரத்திற்கு மேம்படுத்த அதி நவீன உபகரணங்களுடன்கூடிய ஒரு மையம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

7. பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, பல்கலைக்கழக அறிவியல் கருவிமயமாக்கல் மையம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

பிற்பகல் 12–10

(இ) சென்னையில் இரண்டு எரிவாயு சுழலி மின் நிலையங்கள் அமைத்தல், துணை மின் நிலையங்கள் அமைத்தல், ஊரக மின்னூட்டிகளில் உயர் மின்னழுத்த விநியோக அமைப்பு நிறுவுதல், டெல்டா மாவட்டங்களில் புதைவட மின்பாதைகள் அமைத்தல், வடசென்னை அனல்மின் நிலையம் நிலை III–க்கு உதவிப் பொறியாளர் பதவிகள் உருவாக்குதல் உள்ளிட்ட எரிசக்தித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. அதிகரித்துவரும் மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், மின் கட்டமைப்பு மேலும் பல ஆண்டுகள் வலுவாக இருப்பதை உறுதி செய்யும் வகையிலும், சென்னையில் தலா 730 மெகா வாட் மின் உற்பத்தித் திறனுள்ள இரண்டு கூட்டு சுழற்சி முறையிலான எரிவாயு சுழலி மின் நிலையங்கள், சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக, இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.